# குருதேவர்

## இந்து மறுமலர்ச்சி இயக்க அறிக்கை- 18

(உறுப்பினர்களுக்கு மட்டும்) இ ம இ பதிவு எண். 135/83.

## இந்து மத- ஹிந்து மத வேற்றுமை விளக்கச்

## சிறப்பு மலர்



(மெய்யான இந்துமத வலிமைக்காக கருவூரர் கட்டிய முதல் கருவறைக் கோபுரம் கொண்ட சத்திஇலிங்கத் "தஞ்சைப் பெரிய கோவில்")

காணிக்கை ரு 1—00

வெளியீடு:26—6—85

# அன்புள்ள சேவகனுக்கு

*அன்புச் சேவக!*

*அஞ்சல் வடிவக் கட்டுரைகளும், கட்டுரைகளும், நூல்களும் பழைய நூல்களைத் தேவைக்கேற்ப சிறுசிறு செய்தித் தொகுப்பாக வடிவப்படுத்தும் செய்திக் கட்டுரைகளும்......... எழுதி எழுதிக் கோப்புகள் நூற்றுக்கணக்கில் குவிந்ததுதான் மிச்சம். பயன் ஏதும் உருப்படியாக எதிர் பார்த்த அளவு கிடைக்கவில்லை.*

*நெஞ்சத்தில் நெருப்புக்கடல் கொதித்துப் பேரலைகள் மிகுந்து அனல்பயல் வீசவாரம்பித்து விட்டது. இனியும், தாமதிக்கக்கூடாது! தாயகத்து மக்களைத் தவறான, போலியான, சோம்பலான ஏமாளியான, கோமாளியான, மோசமான, மோச[illegible]யான கூலிப்போக்குடைய அடிமைச் சிந்தையுடைய பயனற்ற.........வாழ்க்கை வாழுமாறு செய்யும் மத்திய மாநிலச் சமய, சமுதாய, அரசியல் கலை இலக்கியத் தொழில் துறைத்தலைவர்களை எண்ணி எண்ணிச் சிந்தை எரிமலைஎனக் குமுறி வெடித்துச் சிதறி நெருப்புக் குழம்பு ஆறாக ஓட ஆரம்பித்து விட்டது இருமருங்கும் சாம்பல் மேடுகள் கரைகளாக உயர்ந்து வருகின்றது*

*இந்தியத் துணைக்கண்டத்தில் மககளின் உள்ளத்தைத் தொட்டும், சிந்தையைத் தட்டியெழுப்பியும், உணர்வில் நிறைந்தும் செல்வாக்குப் பெற்றுத் தலைமை தாங்கி வழி நடத்தக்கூடிய தலைவர்களேயில்லை* [Neither the leaders are inspired nor they can inspire others]*, அதாவது, தன்னம்பிக்கையும் தன்னுணர்வும், அகஞானமும், புற ஞானமும், மீக்கூரப்பெற்றுத் தற்கவர்ச்சியும், புறக்கவர்ச்சியுமுடைய தலைவர்களே நம் நாட்டில் ஏறத்தாழ இல்லை! இல்லை!! இல்லை!!!- எனவேதான் எங்கும் இருள்! இன்னல்! இடர்! இழிவழிவு! ஏமாற்று! சுரண்டல்! கொள்ளை! அநியாயம்! அநீதி!*

*நண்ப! அனைத்துத்துறைகளில் உள்ள தலைவர்களும், தங்களுக்கு எதிர்பாராமல் கிடைத்த மதம், சாதி, பாரம்பரியம், பணம், புகழ்...... முதலிய போலியான செல்வாக்கை வைத்துக் கொண்டு ஏமாற்று வேலையே செய்து வருகிறார்கள். இவர்களுக்கெல்லாம் மிக நன்றாகத் தெரியும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை மக்கள் செம்மறியாட்டு மந்தைபோலத் தங்களின் பின்னால் வந்தேதிருவார்கள் என்பது. எனவேதான், இவர்கள் கொள்கையோ* Policy) *நெறியோ*(Principle)*, முறையோ*[Standard approaches and attitudes of procedure]*, குறிக்கோளோ*(aim)......... *இல்லாமல் சுயநல வெறிகொண்டவர்களாகவே செயல்படுகிறார்கள் அதாவது, இவர்கள் தங்களின் குடும்பம், சொந்தம், உறவினர், நண்பர் இயக்கத்தவர்......... என்ற குறுகிய எல்லைகளையே பாதுகாப்புக் கோட்டைகளாகவும், நடைபாதைகளாகவும் கொண்டு செயல்படுகிறார்கள்.*

**நண்ப! இன்றைய இந்தியத் தலைவர்கள் அனைவருக்குமே, மிக நன்றாகத் தெரியும். தாங்கள் மக்களை ஏமாற்றுகிறோம் என்று எனவே தான் அவர்கள் மக்கள் எப்போது, வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும், தங்களை மறுக்கக் கூடும். வெறுககக் கூடும்...... என்பதை, தெளிவாக உணர்நது அதற்கேற்ப எச்சரிக்கையாகவே வாழுகிறார்கள். இவற்றால்தான் எந்தத் தலைவரும் உண்மையான பிடிப்போடும் துடிப்போடும், செயல்படுவதேயில்லை. இப்படிப்பட்ட ஓர் இரண்டுங் கெட்டான நிலையில் தலைவர்களும், மக்களும்,உள்ள காலத்தில்தான் நாம் செயல்படுகிறோம் என்பதை என்னும்பொழுதுதான் நமது இன்றையகொள்கை முழக்க, விளக்க வளர்ப்பு முயற்சிகள் மாற்றிக் கொள்ளப்பட வேண்டுமோ என்று எண்ணுகிறோம்யாம்**

**நண்ப! யாம் தாலாட்டுப் பாடல்களாகவும், காவடிச் சிந்துகளாகவும், தெம்மாங்குகளாகவும், கலை நிகழ்ச்சி இன்னிசைப் பாடல்களாகவும், கதை நிகழ்ச்சி வில்லுப்பாடல்களாகவும், நாடகங்களாகவும்,......... நமது வரலாறுகளையும், இலக்கியங்களையும்; தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், எழுதிவிடலாமா? என்று எண்ணுகிறோம். இது ஒருவேளை எமக்கு பெரிய வீழ்ச்சியாகவும் இருக்கலாம். ஆனாலும் வேறு வழியில்லை. கலைகளின் மூலம்தான் நமது கருத்துக்களைப் பரப்பியாக வேண்டுமென்ற நிலை நம்மவர்களால் விரும்பி வரவேற்கப்படுகிறதா என்பதைத் தெரிந்துக்கொள்ள விரும்புகிறோம்யாம்.**

-தொடர்ச்சி 6ம் பக்கம

# இந்து மதம் - ஹிந்து மத விளக்கக் கட்டுரைத் தொடர்- 1

**இந்து மதம், ஹிந்து மதம் - இது என்ன புதுக்குழப்பம் என்று திகைக்க வேண்டாம் இக் கட்டுரையினை அனைவரும் படித்துணரும் போது ஆரியர் -களின் பொய்யான ஹிந்துமதத்தை உணர்வர். பகுத்தறிவு, பயனுமுடைய பதினெண் சித்தர்களின் உண்மையான 'இந்து மதம்' அனைவருக்கும் தெரியவரும்.**

இன்றைய நாட்டு நடப்பில், நாத்திகர்களும், மத எதிர்ப்பாளர்களும், மத வரலாறுகளையும், மத இலக்கியங்களையும், தத்துவங்களையும், ஊன்றிப் படித்து வருகின்றனர்கள். மதவாதிகள் அனைவரும் ஆர்வமோ, ஆழமான புலமையோ, இல்லாதவர்களாகத்தான் வாழ்கின்றனர்கள். இவர்களால்தான் 43 075, 85 ஆண்டு -களுக்கு முன்னால் உருவான மெய்யான இந்து மதத்தை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் வந்த வட ஆரியர்கள் தங்களுடைய ஆபாச கற்பனைகள் மிகுந்த காட்டு மிராண்டி கதைகள், மிகுந்த வாழ்வியலுக்குப் பயன்படாதநடைமுறைகளும,மிகுந்த தங்களுடைய வேத மதத்தால், உருத்தெரியாமல் சிதைந்து சீரழித்துச் சிதைத்து விட்டார்கள். அதாவது, இன்றைக்குச் சொல்லப்படுகின்ற ஹிந்து மதம் உருவாயிற்று. இந்த ஹிந்து மதத்தால் தான் ஜாதிகள், வலுப்பட்டன. சாஸ்த்திர சடங்குகள், விரதங்கள், மிகுந்தன. மதமே, மடமையும், மூடநம்பிக்கையும ஆபாச -மும் மிகுந்தது என்ற கருத்து வலுப்பட்டது.

இந்து ஹிந்து மதத்தால்தான் அனைத்துவகையான முன்னேற்றங்களுக்கும், முட்டுக்கட்டைப் போடப்படுகின்றன என்று பகுத்தறிவு வாதிகளும், நாத்திகவாதிகளும், துணிந்து பேச ஆரம்பித்து விட்டார்கள். இவற்றிற்கு எல்லாம் மேலாகச் சத்தியையோ சித்தியையோ தரமுடியாத சமசு கிருத மந்திரங்களால் அலுப்பும், சலிப்பும், புளிப்பும், தோல்வியும் அமைந்திட்ட உண்மையான பத்தர்கள், திகைத்து திணறி ஹிந்துமத மறுப்பாளர்களாகவும், வெறுப்பாளர்களாகவும், மாறிடும் நிலை ஏற்பட்டது சமசுகிருத மதம் கூறும் புராண இதிகாசங்கள், ஏற்கனவே தமிழிலுள்ள மெய்யான இந்து மதத்தின் புராண இதிகாசங்களோடு வேறுபட்டும், மாறுபட்டும், முரண்பட்டும் தெளிவுக்கே வர முடியாத குழப்பநிலை பெற்றுவிட்டன ஆன்மீகத் துறையிலுள்ள இலக்கியங்களின் பெயர்களையும் பழக்க வழக்கச் சம்பிரதாயங்களின் பெயர்களையும், பிறமத வாழ்வியல் நடைமுறைகளைக் குறிக்கும், சொற்களையும், சமசுகிருத மொழிச்சொற்கள் சிதைத்துப் புதிய பொருளற்ற சொற்களை உருவாக்கியும் முழுமையாகக் கொன்று மூடிமறைத்து விட்டு பொருளுள்ள புதிய சொற்களை உருவாக்கியும்,செயல் பட்டு விட்ட காரணத்தினால்தான், தங்களை போல் ஹிந்து மதம் என்ற ஒன்று இருக்கின்றதா? அதாவது, அனாதி காலத்துக்கு முன் விண்வெளி -யிலிருந்து வந்த பதினெண் சித்தர்கள் தங்களுடைய தாய்மொழியான அமுதத் தமிழ் மொழியில் வெளியிட்டதுதான், அண்ட பேரண்டமாளும், மெய்யான இந்துமதம் இதற்கு தெளிவான வர -லாறு உண்டு பயன்மிக்க இலக்கியங்களும் உண்டு, நடைமுறைகளும், உண்டு.

இவற்றையெல்லாம், வடஆரியர்கள் தங்களுடைய சமசுக்கிருத மொழியில்தான் நன்கு திட்டமிட்டுப் படிப்படியாக அடிப்படையோடு சிதைத்துச் சீரழித்து விட்டார்கள். இம் மாபெரும் மோசடியை, பித்தலாட்டத்தை, ஏமாற்றத்தை, சதியை, சூழ்ச்சியை........ பதினெண் சித்தர் பீடாதிபதிகளால்தான் முறையாகவும், நிறையாகவும், இனங்கண்டு தெளிவாக விளக்கியுரைக்க முடியும். இதைத்தான் பத்தாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகள் செய்தார்கள். இருந்தபோதிலும், நீடித்த நிலைத்து நிற்கக்கூடிய வெற்றிகளைப் பெறமுடியாமல் போய்விட்டது. எனவேதான், ஏட்டுலகில், கட்டுரைகளாகவும், நூல்களாகவும் மெய்யான இந்து மதத்தின் மறு மலர்ச்சிக்கும், வளவளர்ச்சிக்கும், கட்சி மீட்சிக்கும், சாதனைகள் சாதிக்கப்படுவதோடு நாட்டு நடப்பில் அருளை அனுபவப் பொருளாக, வழங்கக் கூடிய அடியான்களும், அடியாள்களும், அடியார்களும், தோற்றுவிக்கப் பட்டுப் பரவலாக அருட்பணி விரிவாக்கத் திட்ட நிலயங்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட நேரிட்டுள்ளது. இவற்றிற் கெல்லாம் மேலாக கற்றவர்களுக்கிடையில், தமிழ் மொழியுணர்வு, இனப்பற்று மிகு ஒற்றுமையுணர்வு பண்பாட்டு பாரம்பரிய உரிமையுணர்வு ............முதலியவைகள் விழிச்சி பெற்றும், எழிச்சி பெற்றும், செழிச்சி பெற்றும்,, இந்துமத மறுமலர்ச்சிக்குரிய பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி 6ம்பக்கம்

# வணக்கவுரை

பதினெண் சித்தர்கள் வாழ்வியல் நடைமுறைகளாகவும், அனுபவப் பூர்வ-மான, பகுத்தறிவுக்கொப்பவுமான தந்திட்ட நெறியே- மானுடகுல உய்வு வழியே இந்துமதம்- இதுவே உண்மையான இந்துமதம். இப்படிப்பட்ட இந்துமதம் மூன்று யுகங்களாக செம்மையாக இருந்து செயல்பட்டிருந்துள்ளது. இக் கலியுகம் தோன்றி ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுல் இந் நாட்டிற்குள் நுழைந்த ஆரியர்கள் போரின்றி சமத்துவமாக வாழ்ந்து கொண்டிருந்த இந்திய தமிழர்-களின் வாழ்வை மெதுவாக தங்கள் ஆபாச, கற்பனையான, போலியான வாழ்க்கையை, நாடோடிப் பண்பாட்டைப் புகுத்தி கவர்ச்சியாலும் மாயையாலும், கட்டுக்கோப்பாலும் சிதறடிக்கத் துவங்கினர். இம்முயற்சிகளை அனைத்துத் துறைகளிலும் திட்டமிட்டுச் செய்தனர் அதனுல் தமிழர்களின் கலை, இலக்கியம், தொழில் சமயம் சமுதாயம் அரசியல் பண்பாடு வாழ்வியல் கட்டுக்கோப்பு.........அனைத்தும் செல்லரித்த நூலாய் பொலி விழந்து போய்விட்டன அனைத்துத் தலைமைகளையும் தமிழர்கள் இழந்தனர். பயனற்ற சாத்திர சம்பிறதாயங்களால் (ஆரியர்களால் தரப்பட்டவை) கட்டுண்ட தமிழாகள் நாளடைவில் பொருளற்ற வெற்றுக் கடைச் சரக்கு என்றதும் முழுக்க முழுக்க சமய வழிமுறைகளற்ற வெற்றுப்போலி வாழ்க்கை வாழத் தலைப்பட்டனர் பதினெண் சித்தர்கள் வழங்கிய மதத் தலைமையும் மத உரி-மையும், மதச்சடங்கையும் தமிழர்கள் இழந்ததால் ஆரியர்கள் கடந்த இரண்டாயி-ரம் ஆண்டுகளாக முதலாளிகளாக எதேச்சதிகாரர்களாக வாழ்ந்து வருகின்றனா.

இந்த அடிமையுணர்வைப் போக்கி நமது உண்மையான நெறியை மீண்டும் தமிழகத்தில் பயிற்றுவிப்பதின் மூலம் தான் ஆரியர்களின் ஏமாற்றையும், மோசடி-யையும் உணரமுடியும், அதற்கான முதல் கட்டமே தமிழர்களின் இந்து மதமும்; ஆரியர்கள் வழங்கிய ஹிந்து மதமும் பற்றி வேற்றுமை விளக்கக் கட்டுரையை இவ் வறிக்கையிலிருந்து தொடர்ந்து வெளியிட உள்ளோம் இவ்வறியச் செய்திகளை படிப்பதோடு நின்று விடாமல்; அனைவரோடும் விவாதிக்க வேண்டும்

**சி.—கவிக்குமார்**

---

# கேள்வியும் நானே! பதிலும் நானே!

1. தோப்புக் கரணம் = தோர்பி + கர்ணம். தோர்பி என்றுல்' இரண்டு கை_களினுல்' என்றும் 'கர்ணம்' என்றுல் 'காதைபிடித்துக் கொள்வது' என்றும் பொருள் என 'இந்துமதம் அழைக்கிறது என்னும் மாத ஏட்டின் விளக்கம் சரியா?

மேற்கண்ட கருத்துக்கள் வட ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்த பின் கூறிய பொருளற்ற கூற்றுகளின் இதுவும் ஒன்று.

தப்புக்கரணம் —> தவறைத்திருத்திக் பரிகாரம் செய்து சத்தி செய்து விடுதல் என்றே பொருள். தப்புக்கரணம் என்ற தமிழ்ச் சொல் வழக்காற்றில் திரிந்து 'தோப்புக்கரணம்' என்றுயிற்று. கரணம் —> செயல் தப்புக்கரணம் என்றுல் தவறுக்காக வருந்தித் திருந்திச் செய்யும் செயல் என்று பொருள்.

# இராமலிங்க அடிகளார் பற்றிய புதிய கண்ணோட்டம்

இராமலிங்க அடிகளார் தன்னை வாழையடி வாழையென வந்ததிருக்கூட்ட மரபினில் வந்த ஒருவராகத்தான் அறிமுகப்படுத்திக் கொள்கிறார். அப்படியானால் ஏற்கனவே உள்ள சித்தர்கள், அருளாளர்கள், அருளாடு நாயகங்கள், மருளாளிகள், அருளாளிகள், மருளாளர்கள், மருளாடு நாயகங்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள்,... என்றுகூறப்படும் அனைவரின் மரபுகளையும் இவர் ஏற்கிறார். என்று தான் பொருள் ஆனால், இவர் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்கள் வழிபாட்டு முறைகள்...... முதலிய அனைத்தையும் மறுதளித்து விட்டு தமது விருப்பம் போல் அருட் பெருஞ் சோதி ஆண்டவர் ஒருவரை அறிமுகப்படுத்தி அவரை வழிபடுமாறு கூறிச் சென்று விட்டார் ஏன் இப்படிச் செய்தார்? தமது புதிய கடவுளையும், வழிபாட்டு முறையையும் பற்றித் தெளிவாக விளக்கங்கள் சொல்லாமலேயே சென்று விட்டாரே ஏன்? வெறும் விளக்கு வழிபாடு தான் இவர் சொன்ன சோதி வழிபாடா? அப்படியானால், விளக்கு வழிபடுவது என்பது கற்காலம் தொட்டு அல்லது அநாதி காலம் தொட்டு இருந்து வருகின்ற ஒன்று தானே!

இன்றைக்குக் கூட எல்லா பெண்களும் ஏழை, பணக்காரர் என்ற வேறு பாடின்றி வீடுகளில் அகல் விளக்கு ஏற்றி, மனைவிளக்கேற்றி, குத்துவிளக்கு ஏற்றி வழிபடும் மரபு இருக்கத் தானே செய்கிறது.
இப்படி அன்றுடம் வழிபடுபவர்கள் இந்த சுடர் (சோதி) வழிபாட்டின் மூலம் மிகச் சிறந்த பயன் அடைந்ததாக எவருடைய பட்டியலும் இல்லை எனவே இது பற்றி யோசிக்க வேண்டி இருக்கிறது இராமலிங்க அடிகளார் கூறிய சோதி வழிபாடு என்பது ஏதோ ஒரு மிகப் பெரிய, அரிய நுட்பமான ஒன்று அதனை அவர் விளக்கிடு வதற்கு முன்னாலேயே, சோதியாகிட நேரிட்டு விட்டது. அந்த நிலை ஏன் ஏற்பட்டது? அவர் காலத்தில் அவரைப் பற்றி புரிந்து கொள்ள முடியாதவர்கள் நிறைய இருந்தார் -கள் அல்லது அவர் பிறருக்கு புரியவைக்க முற்படவில்லை? இவை பற்றி யாருமே முறையாக சிந்தித்து ஆராயவில்லை.

அருட் பெருஞ்சோதி வழிபாடு என்பது ஐயா அவர்களைப் போலவே, ஆடை உடுத்தி தவ வாழ்வு வாழ்ந்து, அருட்பாக்களை அல்லும் பகலும் அயராது ஓதிக் கொண்டே இருப்பது தானா? விளக்கின் சுடரையும், கற்பூரச் சுடரையும் கண்டு கண்டு கண்ணீர்மல்கி களிப்பெய்வது தானா? எந்த விதமான தெய்வீக அநுபவம் இது வரை அருட் பெருஞ்சோதி ஆண்டவரை வழிபட்டவர்களுக்கு கிட்டியதாகப் பட்டியல் போட்டு விளக்கப் படவில்லை! இராமலிங்க அடிகளாரைப் பின் பற்றி ஒரு நூறுஆண்டுகளுக்கு மேலாகப் பல்லாயிரக் கணக்கான மக்கள் வாழ்ந்து வந்து இருக்கிறார்கள். இவர்களில் யாரேனும் ஒருவர் இருவர்களாவது, ஐயாவின் பெயர் விளங்கும் அளவிற்கு வழிபடும் நிலையை பெற்று இருக்கிறார்களா? அதாவது தனித்தனி கருவறை மூலவர்களாக ஆகியிருக்கிறார்களா? இது பற்றி ஏதேனும் ஆய்வு இன்றைய நிலையிலாவது துவக்கப்பட்டு இருக்கின்றதா? ஏனெனில் ஐயா அவர்களே ''கடை விரித்தோம் கொள்வாரில்லை'' என்று தெளிவாக தன்னுடைய முயற்சிபற்றியும், முயற்சியின் மாபெரும் தோல்வியைப் பற்றியும் மிகமிகத் தெளிவாகவும் நேரடியாகவும்கூறிச் சென்று விட்டார். அவர் காலத்திலேயே அவருடைய நேரடி முயற்சியாலும், உருவானவர்கள் என்று பட்டியலிட்டு காட்ட முடியாத நிலை இன்று வரை இருந்து வருகிறது இது ஏன்? ஏன்? ஏன்?

(தொடரும்)

இந்து மதத்தையும், ஹிந்து மதத்தையும், தனித்தனியாகப் பிரித்து வேறு படுத்திக் காட்டிச் செயல்பட வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? எப்படி ஏற்பட்டது என்பதனை மெய்யான இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள் புரிந்து கொண்டேயாக வேண்டும் என்பதற்காக மட்டும் சித்தர் நெறிச்செல்வர்கள் செயல் படத்துவங்க வில்லை ஹிந்துமதத்தால் நிறைய செயல்நிலை மோசடிகள், சுரண்டல்கள், தத்துவத் தவறுகள், வரலாற்று குழப்பங்கள், இருட்டிப்புக்கள், அருளுலக இருள்கள் இழப்புக்கள் நலிவுமெலிவுகள், குறைகள் பொருளுலகச் சர்வாதிகாரங்கள், ஏதேச் சதிகாரங்கள், சாதிச்சண்டைகள், மதப்போட்டிப் பொறாமைப் போர்கள், கூலி மனப்பான்மை வளர்த்தல், ஏழ்மையை நியாயப்படுத்துதல், வறியவர்களைச் சிந்திக்க விடாமல் செய்தல், முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் மூடப்பழக்க வழக்கங்களும். அறிவுநிலையை நோயுறச் செய்யும் கண் மூடித்தனமான நம்பிக்கைகளும், தமிழினப் பற்றையும், ஒற்றுமையும், ஒழித்தல், தமிழ்பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளைச் சிதைத்துச் சீரழித்தல் உண்மையான இந்துமத வாழ்வால் கிடைக்கக் கூடிய அருட் சத்திகளையும், சித்திகளையும் முத்திகளையும், கெடுத்தல், அருளுலக அநுபவங்களைப் பெற முடியாமல் தடுத்தல். இந்து மதத்தையே சுவைக்குதவாத கற்பனைகளும், காட்டுமிராண்டிக் கதைகளும், அநாகரீக ஆபாசங்களும், மிகுந்தப் பயனற்ற, ஒன்றாக இயங்கச் செய்தல்; இந்துமத வரலாறுகளையும், இலக்கியங்களையும், தத்துவங்களையும் வாழ்வியல்களையும் செயல்சித்தாந்தங்களையும், உருத்தெரியாமல் செய்தல் இந்து மதத்தைத் தோற்றுவித்த பதினெண்சித்தர்களின் கருவழிவாரிசுகளும். குருவழிவாரிசு களும் இந்துமத வழிகாட்டலைச் செய்ய முடியாமல்செய்தல்;........என்று எண்ணற்ற குற்றச் சாட்டுக்களை ஹிந்து மதத்தின் மீதும், அவற்றின் சொந்தக் காரர்களான பிற மண்ணினர்களான பிருமணர்கள் மீதும், அவர்களின் சமசுகிருத மொழியின் மீதும் அவர்களின் வேத நாகரீகத்தின் மீதும் அவர்களின் மீதும் கூறிக் கொண்டே செல்லலாம்.

இப்படி மிகத் தெளிவான குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன காரணத்தால் தான் இவற்றிற்குப் பரிகாரம் தேடி, மேற்கண்ட ஹிந்து மதத்தையும், அதற்குரிய மனிதர்களையும், அவர்களின் முயற்சிகளையும், எதிர்த்துப் பேசிப் போராடி விமர்சித்து வீண்பொழுது போக்காமல்; நேரடியாக உண்மையான இந்து மதத்தின் வரலாறுகளையும், தத்துவங்களையும், செயல் சித்தாந்தங்களையும், அநுபவ நெறிகளையும, கடைபிடிக்க வேண்டிய சட்டதிட்டக் கட்டுப்பாடுகளையும், சடங்குகளையும, சம்பிரதாயங்களையும், பூசாவிதிகளையும், ஏட்டறிவாகவும், பாட்டறிவாகவும், வழங்குகிற் பணி இ ம. இ யின் மூலம் நடைபெற வாரம்பித்து விட்டது.

2ம்பக்கத்தொடர்ச்சி

நண்ப! நாம் அ.வி தி யின் பெயரால் பயிற்சிக் கொடுத்து வளர்த்துள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் அனைவருமே கோபுரத்தை தாங்கள்தான் தாங்கும் பதுமைபோல் இருக்கிறார்கள். எனவே, இ,ம.இ யின் மூலம், ஆங்காங்கே சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், சிறப்புக் கட்டங்கள், பட்டி மன்றங்கள்,......... முதலியவை நிகழ்த்தி நமது வரலாறுகளையும், இலக்கியங்களையும், தத்துவங்களையும், சித்தாந்தங்களையும், நேரடியாக பொதுமக்களிடம் விளக்கி நமக்கு ஆதரவு திரட்டினால் தான் முடியும். அதாவது, அ. வி. தி செயல் வீரர்களால் தேவையில்லாத போட்டிகளும், பொறாமைகளும், சண்டை சச்சரவுகளும், நிறுவன நிர்வாக சீரழிவுகளும் தான் ஏற்படுகின்றன. விரிவாக உங்களின் நெஞ்சந்திறந்த உணர்வு நிறை எண்ணங்களைப் பதிலாக, உடனே அனுப்புமாறு வேண்டி இந்த அஞ்சலை நிறைவு செய்கிறோம்.

அன்பு,
ஞாலகுரு சித்தர் கருவூரார்
14—7—85

**அருட்கேணி நீர்க் குவளைகள்,..................!**

# தமிழின மறுமலர்ச்சிப் போர்

## The war of the Tamilian Renaissance

நண்ப! " தமிழர்களின் ஒற்றுமையின்மையும், இனப்பற்றின்மையும்தான், தமிழின மறுமலர்ச்சிப் பணியை நிறைவு செய்யவில்லை!! என்றோர் கருத்து நிலவு -கிறது. இது தவறு. மாபெருந்தவறு.

பல்வேறு மொழியினர் தங்களைத் தமிழர்களாக ஆக்கிக்கொண்டு தமிழகத் -தில் வாழுகின்ற காரணத்தால் இனப்பற்றும் ஒற்றுமையும் உருவாகிட உதவிடும். 'மொழிப்பற்று' நீரின்றி வாழக்கருகிடும் பயிர் போன்று ஆகிவிட்டது அதாவது, தமிழ்மொழி அறிவு தமிழ் மொழியின் சிறப்பு, தமிழ் மொழியின் காலத்தொன்மை' இலக்கிய வளம்...........முதலியவற்றில் தமிழர்மனம் ஈடுபட்டிடாமல் பிறமொழி யினர் கெடுத்து, தடுத்து வருகின்றனர்.

தமிழர்களாக இருப்பவர்கள் பிற மதங்களில் ஈடுபாடுகொண்டிட்ட போதும் தமிழ் மொழியின் பெருமைகளையும், உரிமைகளையும் போற்றி பேணித்தான் வருகின்றார்கள்- ஆனால் பணம், பதவி, பட்டம், அதிகாரம்........ முதலியவற்றை நாடித்திரியும் அரசியல் வாதிகள் தான் மிகக்கொடியவர்களாக, கேடுகெட்டவர் களாக துரோகிகளாக... .....வாழ்ந்து தமிழ்மொழியின் எல்லாப் பெருமைகளையும் உரிமைகளையும் கொன்றுவருகிறார்கள்.

அத்துடன் இவர்களே தமிழினம் என்ற ஒன்று கற்பனையோ என்று ஐயுறு வண்ணம இனப்பாரம்பரிய உணர்வினைச் சிதைத்தும் சீரழித்தும் செயல்படு கின்றார்கள் இவர்களில் தான், ஆங்காங்கு மழலைமொழி பேசும் தளிர் நடைக் குழந்தைகளாக வளரும் தமிழினப் பற்றுக்கும் ஒற்றுமைக்கும் உரிய முயற்சிகளையும் அதற்குரிய இயக்கங்களையும், இயக்க வீரர்களையும் ஈவு இரக்கமின்றிக் கழுத்தை நெறித்துக் கொன்று விடுகிறார்கள். இந்த கொலைகார அரசியல் வாதிகளிடமிருந்து தமிழின உணர்வுகளை, தமிழினப் பற்றுக்கும் ஒற்றுமைக்கு முரிய முயற்சிகளை, தமிழ்மொழியின் வளத்தையும, பொருமைமிகு வரலாற்றையும் விளக்கிடும இலக்கியங்களை, இலக்கிய உணர்வுகள் இலக்கியம் போற்றும் இயக்கங்களை.... .. உடனடியாக காப்பாற்றியாக வேண்டும். அதற்குரிய காப்பகமாகச் சமயத்தையும், சமயம் சார்ந்த மரபுகளையுமே பயன்படுத்த வேண்டும். எனவே தான், நாம், ''சமய வளர்ச்சியே சமுதாய வளர்ச்சி'', சமயமே இன ஒற்றுமையும், பற்றையும் செழிக்கச் செய்யும்'', ''சமயமே மொழியுணர்வையும் இலக்கிய அறிவையும் வளப்படுத்தும,'' சமயமே வீட்டையும் நாட்டையும் வடிவப்படுத்தும், ''சமயமே மாபெரும் உரிமைப் போருக்குரிய மாவீரர்களையும் சூழ்நிலைகளையும் உருவாக்கும், ''சமயமே தனி வீரர்களுக்கும் படைக்குமுரிய பயிற்சிகளை அளிக்க வல்லது,'' ''சமயமே மறு மலர்ச்சிப் பணிக்கு உயிர்''......என்ற கருத்துச் சொற்றொடர்களை போர்க் கருவிகளாக வழங்குகிறோம். இதனால், ஒவ்வொரு தனி மனிதனும் தமிழின மறுமலர்ச்சி போரைத் தலைமை தாங்கி நடத்தும் தரமும் உரமும் திறமும் பெற்றவனாகி விடுகிறான்.

தமிழின விழிச்சி ஏறத்தாழ நூற்றாண்டுக்குப் பலதடவை ஏற்பட்டுக் கொண்டே தானிருந்து வருகிறது என்பதை வரலாற்றுச் செய்திகள் தெளிவாக விளக்குகின்றன. கி. மு. முதல் நூற்றாண்டின் ஆரியர் தமிழினத்தை வீழ்த்தி மதுரை மாநகரைக் கொள்ளையிட்டு, மதுரைத் தமிழ்ச் சங்க நூல்களை எரித்து, நாடெங்கு மிருந்த தமிழ்ப்புலவர்களை ஈவு இரக்கமின்றிக் கொலை செய்து வெறியாட்டமாடினா. ஆரியர்கள் மிக எச்சரிக்கையாக அரசுகட்டிலிலும், ஆட்சித்துறைகளிலும் ஆலயங்களி -லும், சமயச் சாத்திரச்சடங்குகளிலும், கல்வித்துறைகளிலும் மிகத்திறமையாகத் தங்களின் சமசுக்கிருத மொழியை ஆதிக்கம் பெறச் செய்திட்டனர்.

குறிப்பாகச் சமசுகிருத மொழியை 'கடவுள் மொழி' 'தெய்வ மொழி', 'மந்திர மொழி.' 'பூசை மொழி' 'சாத்திரங்கள் நிறைந்த மொழி'......,பாமரர் முதல் படித்தவர் வரை நம்பும்படி செய்தனர். அதன் மூலம் அம்மொழிக்குரிய ஆரியர்கள் உயர்ந்தவர்களாகவும், அவர்களுடைய பண்பாடு, நாகரீகம், இலக்கியம்........... முதலியவை உயர்ந்தவையாகவும் கருதப்படும் ஓர் எண்ண ஓட்டத்தை உருவாக்கினர் இந்த எண்ண ஓட்டத்தால் தமிழினம் ஆரிய இனத்திடம் அடிமையாயிற்று.

இந்த அடிமை வலையை அறுத்தெரிய இரண்டாயிரமாண்டுகளாக முயற்சிகள மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இந்த ஆரியமாயை எதும் இருளை அகற்ற இரண்டாயிர மாண்டுகளாக முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த ஆரிய முதலையின் வாயிலிருந்து தமிழினத்தை விடுவிக்கும் முயற்சி இரண்டாயிர மாண்டுகளாக நடைபெற்று வருகினறது.

ஆரியரை எதிர்த்து தமிழின விடுதலைப் போரை இன்றைய திருச்சி மாவட்டக் கருவூர் பசுபதீசுவரர் கோயிலில் நிறைவு கொண்டுள்ள பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூரர் ஆரம்பித்தார். அம் முயற்சியின் செயல்வடிவாக மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர் திருஞான சம்பந்தர், சுந்தரர்...........என்று அறுபத்து மூன்று நாயன்மார்களும், பன்னிரண்டு ஆழ்வார்களும், தொகையடியார்களும் தொடர்ந்து செயல்படுத்தினர் இன்றைய பகுத்தறிவுவாதிகள், நாத்திகர்கள்,சமய வெறுப்பாளர்கள்.....முதலியோர் கருதுவதுபோல் நமது சமயவாதிகள் பழமை வாதிகளாகவோ, மடமை வாதிகளாக வோ இல்லை; இவர்கள் தான் உண்மையான சீர்திருத்த வாதிகள், பகுத்தறிவுவாதி கள், புரட்சிவாதிகள், சமுதாயமாற்றப் போர்த்தளபதிகள் வேறு எந்த நாட்டுச் சமய வாதிகளும் சாதிக்காத அளவுக்குச் சமயத்தின் பெயரால் மாபெரும் சமுதாய மாற்றங்களைச் செய்திட்ட வரலாற்றுப் பெருந்தலைவர்களே நமது சமயவாதிகள். இப் பேருண்மை இந்த நூற்றுண்டில் உணரப்பட முடியாமல் போனதற்குத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா அவசரக் கோலமாக, அறை குறையான இலக்கிய வரலாற்றுக் கருத்துக்களோடு ஆற்றிய சமுதாயச் சீர்திருத்தப் பணியேயாகும். இந்த மிகப் பெரிய தவற்றுக்குப் பரிகாரம் தேடும் போது; தந்தை பெரியாரின் தன்னல மற்ற துணிவு மிக்க தளராத பகுத்தறிவுப் பணிகளையும் சீர்திருத்தப்பணிகளையும் சிதைவுறவோ சீரழிக்கவோ செய்து விடக்கூடாது. அவரால் எந்த அளவு பொதுப் பணி செய்ய முடிந்ததோ அது நடந்தேறிவிட்டது என்ற அளவில் நாம் நிறைவு பெறல் வேண்டும் அப்பொழுது தான் அவர் அரைகுறையாக விட்டவைகளையும், தவருன முடிவுகளெடு -த்துப் பயனற்றுச் செயல்பட்டிட்டவைகளையும்.........சரி செய்து மேற் கொண்டு விரைந்தும் விரிநதும் பணியாற்றிட முடியும் நம்மால்.

கடைச் சங்க வீழ்ச்சிக்குப் பிறகு பாலி மொழியும், சமசுகிருத மொழியும், பிரா கிருத மொழியும், சமண மதமும், புத்த மதமும் முத்தமிழின் வீழ்ச்சியைத் தொடர்ந்து காத்துத் தமிழினம தாழ்ச்சியிலிருந்து மீட்சிபெருமல் செய்திட்டன அப்பொழுது தான் முதலில் மாணிக்க வாசகர் தோன்றிப் புத்த மதத்தையும் அது சார்ந்த பாலிமொழியையும் வென்றிட்டார். இரண்டாவதாகத் திருநாவுக் கரசரும்திருஞானசம்பந்தரும்தோன்றிச்சமண மதத்தையும்அவை சார்ந்தபிராகிருத மொழிச் செல்வாக்கையும் வென்றிட்டனர். இப்படி மிகப்பெரிய சீர்திருத்தவாதிகள் தமிழ்மொழியும், தமிழினமும் காத்த மாவீரர்கள், தமிழ் பண்பாடும், தமிழ் நாகரீகமும் மாபெரும் வீழ்ச்சியடைந்திடாது தடுத்து நிறுத்திய புரட்சி வீரர்கள்.........தகுதியினை -யே திருவாசகத் தேவார ஆசிரியர்கள் பெற்றிடுகின்றுர்கள்.இவர்களைத்தொடர்ந்தே மற்ற எல்லா நாயன்மார்களும், ஆழ்வார்களும், புரட்சி வீரர்களாக, சமுதாயத் தொண்டர்களாக, மொழிப்போர் இயக்கத்தலைவர்களாக, பண்பாடும் நாகரீகமும் காத்த மாவீரர்களாக கற்கோயில்கள் கண்ட கலைஞர்களாக, சொற்கோயில்களமைத்த மேதைகளாக பேரறிஞர்களாக விளங்குகிருர்கள்.

தொடரும்

பயந்து பயந்து அறிவுரை கூறி மார்க்சியத்தை எனக்குப் பாடமாகப் போதித்தார். ஏனெனில், என்னை ஒரு புரட்சி வீரனாக, புதுமைப் பயிரை, பொதுமை உணர்வைப் பூத்துக் குலுங்க வைக்கப் போகும் ஒப்பற்றத் தலைவனாக உருவாக்கி வந்த என் தந்தை நான் மேலும் மேலும் இறைத் துறையில் நாட்டமும். ஆர்வமும் அளப்பரியப் புதுமைக் கண்ணோட்டத்துடன் நோக்குவதும் கண்டு எனக்கு விரைவாக ஆனால் தெளிவாக மார்க்சீயச் சித்தாந்தத்தை அறிவுறுத்தினார், ஏனெனில் பொதுமை உணர்வை வளர்க்கும் மார்க்சீயத்தை எங்கே நான் அழித்து விடுவேனோ என்றஞ்சினார் அவருடைய கருத்துப்படி தனியொரு மனிதனால் என்றால் மார்க்சியத்தைப் பாழ்படுத்த முடியு-மெனறால்; அது. மார்க்சியத்துக்கே பெருந் தோல்வியாகும். இருப்பினும். என் தந்தையிடம் நான் ஒரு மார்க்சியச் சிந்தனையாளன் மார்க்சியப் போக்கிலே புதுமைக் கருத்துக்களையும், பொதுமை உணர்வுகளையும் வளர்க்க முற்படுபவன். அறியாமையையும். மூடநம்பிக்கையையும் இருளையும் அழிக்க முற்படுபவன் என்பதைத் தெளிவுற, பாங்குற எடுத்துக் காட்டிடவே 'கார்ல் மார்க்சின்' வாழ்க்கைப் பற்றிய விரிவான படிப்பையும், ஆராய்ச்சியையும் தொடர்ந்திட்டேன். ஏனென்றால், மார்க்சின் ஏட்டறிவும். பட்டறிவும், நட்பும், குடும்பநிலையும் காலச் சூழ்நிலையும் தான் 'மார்க்சியச் சித்தாந்தத்தை ஈன்றெடுத்தன மார்க்சின் வாழ்வின் நிலையை உற்று உற்று நோக்கல் மாத்திரம் மூலமே இதனைச் சிறப்புற விளக்க முடியும் எனப் பெரிதும் நம்பினேன் இம்முடிவு என் தந்தைக்குப் பெருமகிழ்வைத் தந்தது

............மரணம் என்பது இறப்பவனுக்கு ஏற்பட்ட இழப்பல்ல; உயிர் வாழ்பவனுக்குத் தான் 'என்று அடிக்கடி' 'எபிகுரசின்' வரிகளை நினைவு கூரும் காரல் மார்க்சு அவ்வரிகளுக்கு ஆழமிக்கதொரு பொருளை நமக்கு உண்மையிலேயே விளக்கிவிட்டு கி. பி. 1883 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் பதினான்காம் தேதி பிற்பகல் 2–45 மணிக்கு தனியறையில் நாற்காலியில் அமர்ந்த வண்ண-மே மறைந்து விட்டார். ஆம் இயற்கை உயிரியல் வளர்ச்சியின் விதியினை 'டார்வின்' கண்டு பிடித்ததைப் போல மனித குலம். உயர்ச் சமுதாயத்திற்குப் போகும் வரலாற்றுப் பாதையைக் கண்ட 'மார்க்சு' இறந்து பட்டார், இப்படிப்பட்ட பாதையைக் கண்டு பிடிக்கப் புறப்பட்டு அன்னா-ரின் வீரவாழ்க்கை இம்மண்ணுலகில் என்று துவங்கியது?

பிரசியாவின் 'ரைன்' மாநிலத்தில் 'டிரியர்' என்ற நகரத்தில் புகழ்பெற்றுத் திகழ்ந்த யூத வழக்கறிஞரான 'இய்ன்ர்ச் மார்க்சு' என்பவருக்கும் 'என்ரியெட் பிரெசுபர்க்' என்பவருக்கும் கி.பி 1818 ஆம் ஆண்டு 'மே' மாதம் ஐந்தாம் நாளன்று கார்ல் மார்க்சு பிறந்தார்,

குழந்தைப் பருவத்தில் முரட்டுத்தனம் கொண்டவராகவும், குறும்புகள் நிறைந்தவராகவும் மற்ற குழந்தைகள் தங்களை மெய் மறந்து கேட்கும் வண்ணம் அதித கற்பனைக் கதைகள் கூறுபவ ராகவும் விளங்கினார் இவருடையப் பள்ளிப் பருவக் காலம் இவரை ஒரு முழுக்க முழுக்க அரசியல் சிந்தனையாளராக மாற்றும் வண்ணமே இருந்தது, கி,பி பதினொராம் நூற்றாண்டின் துவக்கத்தில் இங்கிலாந்தில் துவங்கிய தொழிற்புரட்சி, விஞ்ஞானப் புரட்சி மெல்ல மெல்ல மக்களின் அறியா–மையை விலக்கிய தோடு மட்டுமல்லாது; சுரண்டலையும் மனிதனை மனிதன் அடிமைப் படுத்தி அழிக்க நினைக்கும் உணர்வும் உன்னத உன்னத நிலையை அடைந்தது ஆங்காங்கு துவங்கிய தொழிலாளர் போராட்டங்கள் துடிப்பும், துள்ளலும் மிக்க இளைஞரான மார்க்சை சமுதாயப் பிரச்சனைகளைப் பற்றி சிந்திக்க வைத்தன மேலும் செர்மானிய ஆன்மீக தத்துவவாதியான 'எகலின்' (ஹெகல்) புகழ் பரவியிருந்த நேரம் இப்படிப் பட்டச் சூழ்நிலையில்தான் இளைஞர் பருவத்தை கடக்க வேண்டியிருந்தது. ஆனால் இப்படிப்பட்டச் சூழ் நிலைகள் இவரை ஒரு சமுதாய வாதியாக மாற்றிற்று சாதாரண இளைஞனுக்குரிய காதல், இன்ப வாழ்க்கை.........பற்றிய நினைவுகள் இவரைச் சூழ்ந்திருந்த போதிலும தன்னை தனக்குப் பிடித்தமான கல்வியைக் கற்பதிலேயே நாட்டத்தை செலுத்தினார்.

............மனித குலத்தின் நன்மைக்காகப் பாடுடுவற்குத் தன்னை ஈடுபடுத்தி கொள்வதிலும் பொது நனமைக்காகப் பணியாற்றுவதின் மூலம் தம்மை உயர்ந்த் தகுதியுடையவர்கள்ளாக ஆக்கிக்கொணடவர்களைத்தான் வரலாறு மிகவும்,மகத்தான மனிதர்கள் என்று அழைக்கின்றது

...............'மிக அதிக எண்ணிக்கையுடைய மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும் மனிதனே மிக மகிழ்ச்சியாக இருக்கிறான் என்று அனுபவம் பாராட்டு வதாலும் தன்னையும் அப்படிப்பட்ட புரட்சிகரமான பாதைக்கு தனனை ஈடுபடுத்திக் கொள்ள முயன்று வெற்றி பெறுவதற்கு......... இரு விழிகளாக மனைவியையும் தோழனையும் பெற்றார்

செல்வ குடும்பத்தில் பிறந்து சமுதாயவாதி, சிந்தனைவாதி என்ற ஒரே காரணத்திற்காக தனது இளமை, சுகபோகம்...........உளளிட்ட அனைத்தையும் துறந்து ஆழமான அறிவார்ந்த நட்பு காதலாகி அதுவே தியாகமாகி மேலும் மனைவிக்கேயுரிய பெணமையுணர்வின் முற்றிய நிலைக்குச் சென்று1843- ஆம் ஆண்டு சூன் மாதம் 19-ஆம் தேதி 'சென்னி'-1 மார்க்சை மணந்தார் அவர் மார்க்சை மட்டும் மணக்கவில்லை மாாக்சோடு வறுமை பிணி துன்பம் மட்-டுமல்லாது உலகிலேயே ஒப்பற்ற மனைவி என்ற நிலையை-யும் மணந்தார். தொடரும்

# திருமூலர் தரும் குருவழிபாடு

(16 வது இதழ் தொடர்ச்சி)

இவற்றை எண்ணிப் பார்ப்பவர்களே! இப்பிறப்புக்கு முன் தானனுபவித்த வாழ்வுகளையும்; இனிமேல், இப்பிறப்புக்குப் பிறகு தானனுபவிக்கப் போகிற வாழ்வுகளையும்: இப்பிறப்பில்: தனது வாழ்வியலில் உள்ள இன்பதுன்ப அவலக் கேவல மாயைகளையும் தொல்லைகளையும் பற்றிய பேருண்மைகளைத் தகுந்த குருவிடம் அணுக்கத் தொண்டாற்றியும்; அடங்கியொடுங்கிப் பழகியும் அனைத்தையும் முழுமையாகக் காணிக்கையாக்கியும்; தன்னுணர்வற்றுக் குருவோடு இரண்டறக் கலந்தும்......... உணர்ந்து கொள்ளுவார்கள். மற்றவர்கள், குருவைப் பெற்றுலும் கற்பாறைமேல் வீசியெறிந்த மண்பாண்டம் போல் குருவின் உறவைச் சிதறடித்துப் பதறப் பதறப் பாழும் வாழ்வை வாழ்ந்து முடித்து அருவுருவாய்க் கதறிக்கதறி வாழ்ந்திடுவர். இந்த இழிநிலை எவருக்கும் வந்துவிடக் கூடாது, என்பதற்காக நவநாத சித்தரான திருமூலர்; மற்ற நவநாத சித்தர்களான யக்ஞ வல்லியர், எண் கோண மேனியான், வால்மீகிகள், கம்பர்கள், இராம தேவர், சனக தேவர்

இராவண தேவர், வசிட்டதேவர், விசுவாமித்திர தேவர், கண்ண தேவர்; தன்வந்திரி தேவர் வியாசர்கள், பெருந்தேவனுர்கள், திருவள்ளுவர்.........முதலானேர் போன்று மானுட வாழ்வியலை நுட்பமாக விளக்குகிறுர்:-

"ஊரெல்லாம் கூட்டி ஒலிக்க அழுதிட்டுப் பேரினை நீக்கிப் பிணமென்று பெயரிட்டு சூரையங்காட்டிடைக் கொண்டு போய்ச் சுட்டிட்டு நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே"

—திருமூலர் திருமந்திரம்

என்று; ஒருவன் இறந்ததும் நடக்கின்ற சமுதாயச் சடங்குகளை அழகிய வண்ண ஓவியமாக தீட்டித் தருகிறுர், திருமூலர்

இந்த அளவு, 'குருவழிபாடு' பற்றிச் சிறப்பாக நூல்கள் செய்த திருமூலரைப் பலரும் குருவாகப் போற்றுகிறுர்களே தவிர; இவருடைய உண்மையான வரலாற்றைப் பதினெண் சித்தர் பீடாதிபதிகளின் குருபாரம்பரியம் எப்படி கூறுகிறது என்பதை அறியவோ, அறிந்ததை அறிவிக்கவோ முன் வருவார் யாருமில்லை.

---

# இந்தியாவில் மார்க்சியம்

## குருதேவர் எழுதிய 'இந்தியாவில் மார்க்சியம்' என்ற நூலுக்கு எழுதிய 'முடிவுரை'யை தொடர்கட்டுரையாக வழங்குகின்றேம்

நண்ப! இந்த 'இந்தியாவில் புரட்சி ஏன்? எப்போது? எப்படி?' என்ற நூலுக்கு முடிவுரை மூதுவதின் மூலமே என் தந்தைக்கும் எனக்குமிடையிலிருந்த கருத்துப் பரிமாற்ற நிலைகளை ஓரளவு உலகுக்கு விளக்கிட முற்படுகின்றேன்

என் தந்தை தனது வாழ்நாள் முழுவதும் முயன்றும்கூட என்னை ஒரு நாத்திகவாதியாக முழுமையான மார்க்சியவாதியாக மாற்றிட முடியவில்லை, ஆனல் பொருள்முதல்வாத எண்ணவோட்டங்கள். மார்க்சியவாதியத்தின் கருத்து முத்திரைகள், எனது உணர்வு ஓட்டங்களில், கருத்தோட்டங்களில், சிந்தனையோட்டங்களில், நோக்குகளில், போக்குகளில் ஊக்குகளில்.........எல்லாவற்றிலுமே மிகமிக ஆழமாகப் பதிந்து விட்டன. என்னல் பொருள் முதல் வாதத்திற்கு எதிராகவோ அல்லது பொருள் முதல் வாதத்தை மறந்தோ, துறந்தோ, மறுத்தோ, எதிர்த்தோ......... செயல்படவே முடியாது அந்த அளவு எனக்கு மார்க்சியத்தின் உண்மைப் பொருளையும் நேரியப்பாதையையும் மறுக்க முடியாத, தவிர்க்க முடியாத, தடைசெய்ய முடியாத, கருத்தோட்டத்தையும், ஆராய்ச்சியுணர்வையும் போதித்து விட்டார் என் தந்தை.

இருப்பினும், 'மார்க்சியத்தில் கடவுளைப் பற்றி, உயிர்களைப் பற்றி பிறப்பிறப்புக்களைப் பற்றி, ஊழ்வினைப் பற்றி விதிபற்றி இறையருட் பயன்பற்றி, முற்பிறப்பு மறுபிறப்புப் பற்றி....., ஏதும் குறிப்பிடப்படவே இல்லை. இவைபற்றிக் கார்ல் மார்க்சுக்கு கடுகளவுக்கூட அறிவோ, அநுபவமோ, ஆராய்ச்சியோ இருந்ததில்லை......... எனவே தான், என்னல் முழுமையாக மார்க்சியவாதியாக ஆகிடமுடியவில்லை, ஆனல் மார்க்சியப் போக்கில் சிந்தனையாளனுக இருந்திட முடிந்தது! முடிகின்றது இது என் தந்தைக்கு பெருங்கவலையையே அளித்திட்டது.

என் தந்தை, நான் மார்க்சியக் சித்தாந்தத்தைப் பாழாக்கிடுவேனே என்று பலமுறை

தொடர்ச்சி 9ம் பக்கம்

# குருபாரம்பரியம் கூறும் யக்ஞவல்லியர் வரலாறு - 3

'யக்ஞவல்லியர்' குருவாக ஏற்றவர்களை மாற்றவோ தூற்றவோ கூடாது, என்ற நியதியையும் மீறி தானே குருவிடம் கற்ற பெற்ற நோற்ற உற்ற அனைத்தையும் திருப்பிக் கொடுத்து விட்டு நேரடியாக எங்கள் குல முதல்வனை சூரியனையே வேண்டித் தவம் செய்து அசுர வேதத்தைக் கற்றுக் கொண்டேன். இதற்குப் பதினெண் சித்தர்கள் தனிமனித சித்திக்காக உருவாக்கிய காயந்திரி மந்திரம், மந்தரம், மாந்தரம், மந்திறம், மாந்தரீகம் என்னும் ஐந்தினையுமே கடுமையாகப் பல ஆண்டு காலம் பயன்படுத்தினேன். அதனுடைய வல்லமையினாலும் தொல்லையினாலும்தான் சூரியனே நேரில் தோன்றிப் பதினெண் சித்தர்கள் படைத்த அசுர வேதத்தை எனக்கு வழங்கியதோடு நான்கு மறைகளையும், இந்த யுகத்தில் கற்றுத் தேறும் தரமும், திறமும், உரமும், பாரம்பரியமும், விவேக வீரியமும் எனக்குத்தான் இருக்கின்றது என்று கூறி அதற்காக நான் என்னென்ன செய்ய வேண்டும் என்பனவற்றையும் விளக்கி வாழ்த்தியருளினார். நானும் சூரிய குலம் பெருமை காக்க கடலோடி நாடோடி வாழ்வுகளை ஏற்று நான்முறை முற்றி யவனானேன் என்று எழுதுகின்றார்.

இந்தச் சூரியனார் பதினெண் சித்தர்கள் படைத்த ஐந்தீ வேட்டல் [ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி என்னும் ஐந்தீ வேட்டல் எனப்படும்], முத்தீ ஓம்பல் [கந்தழி, வள்ளி, கொடிநிலை எனும் மூன்றே முத்தீ ஓம்பல் எனப்படும்] எனும் இருபெரும் பிரிவு வழிபாட்டு முறையிலே அடங்குகின்ற எட்டு முறைகளில் 'யக்ஞம்' என்ற முறையை மட்டும் தேர்ந்தெடுத்து நல்ல தேர்ச்சி பெற்றார். இதனால், 'யக்ஞவல்லி' என அழைக்கப் பட்டார். ஆனால், இந்த 'யக்ஞவல்லி' என்ற பட்டத்துக்குரிய சித்தியை இவர் இவருடைய மாமனும் குருவுமாகிய வைகைச் சம்போகிக்காக ஒரே ஒரு முறை பயன்படுத்தித்தான் நிலையான புகழைப் பெற்றிட்டார். இச்சுவையான நிகழ்ச்சி பற்றிய முழு விவரங்களையும் இவரே தெளிவாக வரலாறாக எழுதியிருக்கின்றார். அதாவது, இவர் சூரிய குலபாரம்பரியம் உள்ளிட்ட பல பாரம்பரியங்களைப் பற்றி பல தொடர் நூல்களைச் சிறப்பாக எழுதியுள்ளார். இவையல்லாமல் தானே எழுதிய 'யக்ஞவல்லியின் கீதை' என்ற நூலையும் அதே போன்று இசைப் பாடல்களாக எழுதப்பட்ட இவர் காலத்திய புகழ்மிக்க 1.பரசுராமர் கீதை, 2.எண்கோண மேனியான் கீதை, 3.வசிட்டர் கீதை........ என்று 48 வகையான கீதைகளைத் தொகுத்தார்.

'யக்ஞவல்லியின் வரலாறு' - முதல் பகுதி இத்துடன் முடிகின்றது.

## யக்ஞவல்லியின் வரலாறு - இரண்டாவது பகுதி
## திரேதாயுகத்தின் முதன்மை யக்ஞவல்லிக்கா? இராமனுக்கா?

இராவணயுத்தத்தால் இராமன் வரலாற்றுத் தலைவனாக வளர்ச்சியுற்றான். ஆனால், திரேதாயுகத்தில் முழுமையான வரலாற்றையும் விளக்கிடும் சான்றுகளையும், ஊன்றுகளையும் தொகுத்தளித்த இலக்கியப் பேராசிரியர், வரலாற்றுப் பேராசிரியர், தத்துவ மேதை, அருளுலக வல்லவன்........ என்ற புகழுக்கெல்லாம் உரிய முதன்மை மேன்மையும் சிறப்புமுடைய திரேதாயுகத்து மனிதர் சூரியனார் எனப்படும் யக்ஞவல்லியே.

(வளரும்)

# பரமாச்சாரியாரின் நன்றி

அன்புடையீர்! வணக்கம்!

மதுரை மாவட்டம், கொட்டம்பட்டிக்கு அருகில் உள்ள காரியேந்தல் பட்டி சித்தர் மாநகர் அருள்மிகு வீர மாகாளி சன்னிதானத்தில் [2—6—1985] -இல் நடைபெற்ற வைகாசிப் பால் குடப் பெருவிழா குறிப்பிட்ட ஒரு சில கிராமத்துக் குரியதாகவோ குறிப்பிட்ட சில வட்டாரத்துக் குரியதாகவோ, இன, சாதி மக்களுக் குரியதாகவோ.........இல்லாமல்; தமிழரின் தன் மானம் காக்கும் விழா வாகவும் தமிழரின் இன உரிமையைப் பேணும் விழாவாகவும்; தமிழ் மொழி மீட்சி பெறும் விழாவாகவும்; இந்துக்கள் விழித்தொழுந்து இந்துமத உணர்வையும், உரிமையை -யும் வளர்த்துககாககும் விழாவாகவும்; விதி, ஊழ்வினே, இராசிகள், மீன்கள், கோள்கள் முதலியவைகள் மக்களே எந்த அளவுக்கு ஆட்சி செய்கின்றன என்பதை அறியும் விழாவாதவும்; இந்துக்கள் ஒற்றுமையோடும், ஒருமைப் பாட்டோடும் இருக்க வேண்டும் என்ற பாடத்தைப் புகட்டும் விழாவாகவும்; இந்து மதத்தின் தலைவர்களான பதினெண் சித்தர்களின் வாரிசுகளே தமிழகத்தை, தென்னிந்தியா -வை, இந்தியாவை, உலகத்தை ஆட்சி செய்யும் வல்லமையும், தகுதியும் பெற்றவர் -கள் என்பதை அதிகார பூர்வமாக அறிவிக்கும் விழாவாகவும்.........நடைபெற்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ் விழாவிற்கு நமது இ. ம. இ. அடியான்கள், அடியாள்கள், அடியார்கள் பொதுமக்கள், ஆதரவாளர்கள், விருப்பாளர்கள், நம்பிக்கையாளர்கள்.......என்று அனைவரும் பெருமனம் கொண்டு பொருள் உதவி புரிந்தமைக்கும்; கண்ணுங்கருத்து மாக இருந்து இரவுபகல் எனப்பாராது ஏறத்தாழ ஒருமாத காலமாகக் கடுமையாக உழைத்து ஒத்துழைப்பைத் தந்தமைக்கும் அருள்மிகு வீரமாகாளி சன்னிதானத்தின் சார்பாகப் பணிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

''தனிமரம் தோப்பாகாது'' 'பலசிறு துளி பெருவெள்ளம்'' என்ற முதுமொழிக் கிணங்க; ஒவ்வொருவரின் உண்மையான உழைப்பாலும், உதவியாலும் தான் இவ்விழா சீறும் சிறப்புமாக நடைபெற்றது என்பதைப் பெருமிதத்தோடும், பணிவோடும் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்பே சிவம்

ஓம் திருச்சிற்றம்பலம்

அன்பு/சித்தரடியான்

வீரமாகாளி சன்னிதானம் பரமாச்சாரியார்

நெ. சேவுகன் 7—6—1985

தொடர்பு; பிரமாச்சாரியார் சி. கவிக்குமார் B.Sc., தலைமைப் பொறுப்பாளர்
56, N.G.O. காலனி, பொன்னேரி-601204.

KVS & மோகா பிரிண்டர்ஸ் தேரடி தெரு, பொன்னேரி